முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

# ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த

## இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

**பிலவ வருடம் ஆனி மாதம் 27ம் திகதி முதல் ஆடி மாதம் 2ம் திகதி வரை**

**(11.07.2021 ஞாயிறு முதல் 18.07.2021 ஞாயிறு வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. பாரப்பா அரங்கஞானி பெருமையை
   பரோபகாரமிக்க உயர் தன்மையை
   கூறப்பா கலியின் கொடுமையை
   குருவாக வந்து காக்கும் மகிமையை
2. மகிமை மிக்க மாதவசி கேட்க
   மார்க்கமுடன் அகத்திய மகரிஷியானும்
   அகிலமதில் இந்தியா தமிழகம் தன்னில்
   அருளுவேன் பிலவஆனி இருபானேழ் திகதிமேல் ஆடி உபய திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன் குறித்த ஆசியை
   ஆறுமுக அரங்கன் கேட்க அருள்வேன்
   ஆளுமை தமிழகத்தின் பலம்
4. பவமான ஞானவழி வந்து
   பாமரர்க்கும் வசதிநிலை தந்தருள
   வளமான பூமியாக இந்தியா தமிழகம்
   வலுப்பெறும் ஞான பூமியாக
5. ஆகவே இந்தியா தமிழகம்
   ஆளுமைகள் தானும் இனி
   மிகையான தருமவழி வந்து
   மேலான சேவை ஆற்றிவர
6. வருகவே கலித்துன்பங்கள் ஓடியே
   வளர்ச்சி பெறும் இந்தியா தமிழகம்
   தருமத்தை ஏற்றுவரும் தலைமை
   தரணிமெச்சவே தலை நிமிரும்
7. தலைநிமிர சமூக அவலங்கள்
   தவிடுபொடியாகி தானாக விலகும்
   ஊழலான சகல இன்னலும்
   உண்மை தலைமையில் உடன்மாறும்

8. மாறுதலை நடுவண் தானும்
மாநில உரிமைகட்குள் வாரா
ஆறுதலாக தயவான சேவை
ஆற்றல்பட இறங்கி செயல்பட
9. செயல்பட செகமே வியக்க
சேவையால் இந்தியா உயரும்
தயவான ஆட்சி நடத்தவே
தமிழகம் முதல் அனைத்து மாநிலங்களும்
10. மாநிலங்களும் நச்சுக்கிருமி அல்லலை
மரணமில்லாதபடி விரட்டி சடுதி
இனிமையான பாதுகாப்பும் வளர்ச்சியும் கூடி
இந்தியா தமிழகம் மாறுதலை பெறும்
11. மாறுதல் தரும் ஞானதேசிகன்
மார்க்கம் வழி தலைமைகள் வர
ஆறுமுகன் ஆசிபட ஆற்றல் பெறும்
அமைந்திடும் ஞானஆட்சி காலமாக
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

பிலவ வருடம் ஆனி மாதம் 27ம் நாள் 11.07.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆடி மாதம் 2ம் நாள் 18.07.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகள் :

உலக மக்களே கலியுகத்தின் துன்பங்களில் இருந்து உங்களை மீட்கவே வந்துதித்த ஆறுமுக அரங்க மகானின் பெருமைகளை காணுங்கள், அற்புத மகா தவசியின் பரோபகாரம் மிக்க உயர் ஞானத்தையும் தருமத்தையும் நேரில் கண்டு தெளியுங்கள். துன்பமும் கொடுமைகளும் மிக்க கலியுகத்தில் சற்குருவாய் தோன்றி உலகோர்க்கு உபதேசித்து கலியுக துன்பத்தில் இருந்து காக்கின்ற அற்புதத்தை அரங்க மகானை குருவாய் ஏற்று உணருங்கள் ஆற்றலும், தவமும், தானபலமும், ஞானமும் மிக்க மாதவசி ஆறுமுக அரங்க மகான் அகத்திய மகரிஷி எம்மிடம் இந்த நாட்டின் எதிர்காலம் குறித்து கேட்க அகத்திய மகரிஷி யானும் இந்தியாவிலும் தமிழகத்திலும் பிலவ வருடம் ஆனி மாதம் 27ம் நாள் 11.07.2021 ஞாயிற்றுக் கிழமை முதல் ஆடி மாதம் 2ம் நாள் 18.07.2021 ஞாயிற்றுக் கிழமை முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தமிழகத்தின் பலம் என்பது அதனை ஆட்சி புரிவோர் கையில் உள்ளபடியால் தமிழகத்தை ஆட்சி செய்வோர்கள் ஞானவழியில் வந்து தர்ம ஞான நெறியினை கடைப்பிடித்து மக்களிடத்து தயவுடன் நடந்து மக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி தந்திட இந்தியாவும் தமிழகமும் வளம் மிக்க பூமியாக மாறும் ஞான பூமியாக ஆகி வலுப்பெறும்.

ஆதலினாலே தேசத்தை ஆட்சி செய்வோர் இனிமேலாகினும் மிக அதிகமாக தர்மங்களை மக்கள் பயனடையும் வகையில் செய்து பொதுச் சேவைகளை விரிவுபடுத்திட நாட்டை பாதிக்கும் கலியுக துன்பங்கள் எல்லாம் நாட்டை விட்டு விலகி ஓடும். நாடும் நல்ல வளர்ச்சியை அடைந்து நாடும் நாட்டை ஆள்வோரும் உலகளவில் தலை நிமிர்ந்து நிற்பர். ஆட்சி தர்ம ஆட்சியாக இருந்தால் நாட்டில் நிலவும் சமூக அவலங்கள் எல்லாம் தவிடு பொடியாகி தானாக விலகிடும். ஊழல் செய்வோர் மாறிடுவர். சகல துன்பங்களும் விலகி உண்மையான தலைமையின் செயல்பாட்டினால் இவையெல்லாம் விரைந்து மாறிடும்.

மத்திய அரசும் மாநில அரசின் உரிமைகளில் தலையிடாமல் தயவுடன் நடந்து வருவதுடன் மாநில அரசுகளை தாயன்புடன் நடத்திட இந்த உலகமே வியக்கும் வகையில் இந்திய தேசம் செயல்பாடுகளிலும் மக்கள் சேவையிலும் அரசியலிலும் உயர்ந்து விளங்கும். தயவு பெருக பெருக நாட்டையே உலுக்கும் நச்சுக் கிருமி அல்லல்களும் விலகி மரணம் இல்லாத நாடாக மாறி பாதுகாப்பும் அதிகமாகி இனிமை சூழல் நாடெங்கும் உருவாகிடும். நாடு விரைந்து வளர்ச்சி அடையும்.

சகல விதமான மாற்றங்களையும் தந்தருளும் வல்லமைமிக்க ஞானதேசிகர் அரங்க மகா தேசிகர் கூறும் உண்மை ஆன்மீக தர்ம நெறியினை ஆட்சி புரிவோர் ஏற்று கடைப்பிடித்து வரவர நாடே முருகப்பெருமானின் நல்லாசியை அடைந்து பேராற்றல் பெற்று சுபிட்சமான வாழ்வை நாடும் நாட்டு மக்களும் அடைந்து சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–